**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 16** |
| **Name** | : | **திரு. விஜயேந்திரன்** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **01.03.2024**

எதிரி-2 ஆஜர். எதிரிகள் 1,3,4 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.10.2016 ம் தேதியன்று மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், பேரையூர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் மற்றும் சாப்டூர் காவல்நிலைய குற்ற எண். 177/2016 வழக்கில் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் நீதிமன்ற முத்திரையிடப்பட்டு, எங்கள் ஆய்வகத்தில் உயிரியல் பகுப்பாய்விற்காக பெறப்பட்டது.

வரிசை எண்.1. வயலெட் மற்றும் ஆரஞ்சு நிற ஷால்

வரிசை எண். 2. வெள்ளை மற்றும் நீல நிற கட்டம்போட்ட வயலட்நிற லுங்கி

மேற்கண்ட சொத்துக்களை பகுப்பாய்வு செய்ததில், வரிசை எண்.2 ல் விந்து கண்டறியப்பட்டது. வரிசை எண்.1 ல் விந்து ஏதும் இல்லை. என்று உயிரியல் அறிக்கை வழங்கினேன். **அந்த உயிரியல் அறிக்கை அதசாஆ.**17

**ஆகும்.** மேலும் விந்துக்கரை பட்ட சொத்தின் பகுதியை குருதிவடிநீரியல் பிரிவில் பகுப்பாய்வு மேற்கொண்டதில் அதன் இரத்த வகை அறுதியிட்டு கூற இயலவில்லை என்று சான்று வழங்கினேன். **குருதிவடிநீரியல் அறிக்கை அதசாஆ.18 ஆகும்.**போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை